**MCOP. 5/ 2024- PW1 .**

**திருமதி. பச்சையம்மாள் க/பெ.முருகன்**

**நாள்:12.08.2025.**
**குறுக்கு விசாரணை 2 வது எதிர் மனுதாரர் தரப்பில் :**

இந்த மனுவில் நான் 1வது மனுதாரர் என்றால் சரி. 2, 3 மனுதாரர்கள் எனது பேரக்குழந்தைகள் என்றால் சரி. 4வது மனுதாரர் என்னுடைய மகள் ஆவார். வாரிசு சான்றிதழில் நானும் எனது 2 பேரக்குழந்தைகள் மட்டும் இருக்கிறோம் என்றால் ஆமாம் எனது மகளுக்கு திருமணம் ஆகி அவள் அவரது கணவருடன் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். புகார் நான் தான் கொடுத்தேன் விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தினை யார் நேரில் பார்த்தார்கள் என்று நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் மகன் ஓட்டி வந்த வாகனத்திற்கு விபத்து தேதியில் இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். என் மகன் இருசக்கரவாகனம் ஓட்டிச்சென்ற போது ெஹல்மட் அணிவில்லை என்றால் சரிதான்.நான் விபத்தினை நேரில் பார்க்காதால் யாருடைய அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். என் மகள் வாரிசு சான்றிதழில் வராததால் அவரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ப்பவேண்டும் என்றால் சரியல்ல. என் மகன் விபத்து சமயத்தில் என்ன வேலை பார்த்து வந்தார் என்றால் முட்டைகோஸ் வெட்டும் வேலை செய்து வந்தார். எனது மகன் கூலிக்கு தான் வேலைக்கு சென்று வந்தார் என்றால் சரிதான். என் மகனின் மாத வருமானத்தை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இரண்டு டிப்பர் லாரிகளை முந்தி சென்று விபத்தினை எனது மகனே ஏற்படுத்தி கொண்டதால் இரண்டாவது எதிர் மனுதார் இழப்பீடு எதுவும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் குற்றவியல் வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு எனது மகனும் காரணம் என்பதால் அதை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.